EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# பழங்குடியினர் மேம்பாட்டுக்கு ரூ.24,000 கோடி திட்டம்

**பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்**



ஜார்க்கண்டில் பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தை புதன்கிழமை தொடங்கி வைத்த பிரதமர் மோடி. உடன், மாநில ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன், முதல்வர் ஹேமந்த் சோரன்.

**ராஞ்சி, நவ. 15:** பழங்குடி சமூகத்தினரின் மேம்பாட்டுக்காக ரூ.24,000 கோடி மதிப்பிலான 'பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தை' ஜார்க்கண்ட் மாநிலத்தில் பிரதமர் நரேந்திர மோடி புதன்கிழமை தொடங்கி வைத்தார்.

மேலும், நாட்டின் வளர்ச்சிக்காக பெண்கள், விவசாயிகள், இளைஞர்கள், நடுத்தர மக்கள் மற்றும் ஏழைகள் ஆகிய நான்கு தூண்களை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்றும் பிரதமர் மோடி தெரிவித்தார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடி சமூகப் போராளி பிர்சா முண்டாவின் பிறந்தநாளான நவம்பர் 15-ஆம் தேதி அவர் பிறந்த ஊரான உலியாட்டுவில் அவரது சிலைக்கு பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார்.

பின்னர், ஜார்க்கண்ட ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன், முதல்வர் ஹேமந்த் சோரன் ஆகியோர் பங்கேற்ற நிகழ்ச்சியில் பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்துப் பேசியதாவது:

பிர்சா முண்டாவுக்கு நான் பட்ட கடனைச் செலுத்தவே இங்கு வந்துள்ளேன். அனைத்துத் தரப்பு மக்களுக்கு எதிரான பாகுபாடுகளும் களையப்பட்டால் மட்டுமே உண்மையான மதச்சார்பின்மை வெளிப்படும். அரசின் திட்டங்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஒரே அளவில் சென்றடைந்தால்தான் சமூக நீதி உறுதி செய்யப்படும்.

இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கு பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் உதவும். பழங்குடியினர் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் நிதியை மத்திய அரசு ஆறு மடங்கு உயர்த்தி உள்ளது.

இந்தப் புதிய திட்டத்தின் மூலம் அடர் வனப் பகுதிகளில் வாழும் பழங்குடி சமூகத்தினரும் பயனடைவார்கள். இதற்காக 18 மாநிலங்களில் 220 மாவட்டங்களில் 22,544 கிராமங்களில் வசித்து வரும் 75 மிகவும் பின்தங்கிய பழங்குடி சமூகங்களை அரசு கண்டறிந்துள்ளது.

இந்தப் பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்துக்காக மத்திய அரசு ரூ.24,000 கோடியை செலவிட உள்ளது.

பழங்குடியினரின் மேம்பாட்டுக்காக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தொடர் நடவடிக்கை எடுத்து வந்துள்ளார்.

**அரசுத் திட்டங்கள் சென்றடைவது உறுதி:** மத்திய அரசின் திட்டங்கள் அனைவருக்கும் சென்றடைவதை உறுதிப்படுத்தும் 'விக்ஷித் பாரத் சங்கல்ப் யாத்திரை' நவம்பர் 15-ஆம் தேதி தொடங்கி அடுத்த ஆண்டு ஜனவரி 26-வரை நடைபெறும்.

ஒவ்வொரு கிராமத்துக்கும் அரசு அதிகாரிகள் விரைந்து சென்று ஏழை மற்றும் பின்தங்கிய மக்களுக்கு அரசுத் திட்டங்கள் கிடைப்பதை இந்தக் காலகட்டத்துக்குள் உறுதி செய்வார்கள்.

**வறுமையில் இருந்து மீட்பு:** ஒவ்வொரு ஏழைக்கும் இலவச ரேஷன் அட்டை, உஜ்வலா திட்ட சமையல் எரிவாயு சிலிண்டர், மின்சார இணைப்பு, குழாய் குடிநீர், மருத்துவக் காப்பீடு, நிலையான வீடு ஆகியவை கிடைக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

கடந்த 2014 முதல் நடைபெற்று வரும் ஆட்சியில் 13 கோடி பேர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

முந்தைய அரசுகள் மீதான நம்பிக்கையை ஏழை மக்கள் இழந்திருந்தனர். ஆனால், தற்போதைய அரசு மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறது.

இதனால், கிராமங்களில் 55 சதவீதமாக இருந்த எரிவாயு இணைப்பு 100 சதவீதமாகவும், 55 சதவீதமாக இருந்த குழந்தைகளின் உயிர் காக்கும் தடுப்பூசிகள் செலுத்துவது 100 சதவீதமாகவும், 70 சதவீதமாக இருந்த குழாய் குடிநீர் இணைப்புகள் 100 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது. 18 ஆயிரம் கிராமங்கள் மின் இணைப்புகளைப் பெற்றுள்ளன என்றார் பிரதமர் மோடி.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் ரூ. 2,000 நிதியின் 15-ஆவது தவணை தொகையான ரூ.18 ஆயிரம் கோடியை இந்த விழாவில் விடுவித்துப் பேசிய பிரதமர் மோடி, கால்நடைகளுக்கு இலவச தடுப்பூசி செலுத்த மத்திய அரசு ரூ.15 ஆயிரம் கோடியையும், விஸ்வகர்மா திட்டத்துக்கு ரூ.13 ஆயிரம் கோடியையும் செலவிட்டுள்ளதாக கூறினார்.

**ஆளுநர் மாளிகையில் போர் விமானம்:** முன்னதாக, ஜார்க்கண்ட் ஆளுநர் மாளிகைக்கு சென்ற பிரதமர் மோடி, 1971-ஆம் ஆண்டு வங்கதேச விடுதலைப் போரில் பயன்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட இந்திய போர் விமானமான மிக்-211-ஐ ஆளுநர் மாளிகையில் திறந்து வைத்தார். அப்போது ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணனின் குடும்பத்தினரை பிரதமர் மோடி சந்தித்தார்.

'தனது பணிகளுக்கு இடையே எனது குடும்பத்தினரைச் சந்தித்து அன்புடன் பேசிய பிரதமர் மோடிக்கு நன்றி' என ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் 'எக்ஸ்' பதிவில் தெரிவித்துள்ளார்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தூத்துக்குடியில் குரூஸ் பர்னாந்து சிலை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்



தூத்துக்குடி நகரின் வளர்ச்சியில் மிகப்பெரும் பங்கு வகித்த குரூஸ் பர்னாந்து பிறந்த நாளையொட்டி தூத்துக்குடி மாநகராட்சி பூங்காவில் ரூ.77.87 லட்சத்தில் நிறுவப்பட்டுள்ள அவரது குவிமாடத்துடன் கூடிய சிலையை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி மூலம் புதன்கிழமை திறந்துவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலர் இரா.செல்வராஜ், செய்தித்துறை இயக்குநர் த.மோகன்.

**சென்னை, நவ. 15:** தூத்துக்குடி நகரின் வளர்ச்சியில் மிகப்பெரும் பங்கு வகித்த, குரூஸ் பர்னாந்துக்கு அமைக்கப்பட்ட குவிமாடத்துடன் கூடிய சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி மூலம் திறந்துவைத்தார்.

தூத்துக்குடி நகர மக்களின் நலன்களைக் காத்திட அர்ப்பணித்துக் கொண்டவர், ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்து. 30 ஆண்டுகள் நகர்மன்ற உறுப்பினராகவும், 5 முறை நகர்மன்றத் தலைவராகவும் இருந்தார். தூத்துக்குடி மாவட்டம் மிகக் கடுமையான குடிநீர் பஞ்சத்தில் தவித்த போது, தாமிரபரணி ஆற்றிலிருந்து குழாய் மூலம் நீர் கொண்டு வரும் திட்டத்தைச் செயல்படுத்தினார்.

அவரது நினைவைப் போற்றும் வகையில், தூத்துக்குடியில் குரூஸ் பர்னாந்துக்கு சிலை நிறுவப்படும் என்று தமிழக அரசால் கடந்த 2021-ஆம் ஆண்டு நவம்பர் 13-இல் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, தூத்துக்குடி மாநகராட்சி பூங்காவில் ரூ.77.87 லட்சம் செலவில் குவிமாடத்துடன் கூடிய சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலையை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்தில் இருந்து செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, செய்தித் துறைச் செயலர் இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோரும் தூத்துக்குடியிலிருந்து அமைச்சர்கள் பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மக்களவை உறுப்பினர் கனிமொழி உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# காற்று மாசுக்கு விடை கொடுப்போம்!

தலைநகர் தில்லியில் காற்று மாசு மிகவும் மோசமான நிலையை எட்டியுள்ளது. தில்லியின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாள்களாக காற்று மாசின் அளவு மிக வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால் பலருக்கு மூச்சுத் திணறல் உள்பட பல்வேறு உடல்நலக் கேடுகள் ஏற்பட்டுள்ளன.

மாணவர்கள் நலன் கருதி தில்லி முழுவதும் தொடக்கப் பள்ளிகளுக்கு நவம்பர் 10 வரை விடுமுறை அறிவித்து மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. தில்லியில் வாகனங்கள் நுழையவும், கட்டுமானப் பணி மேற்கொள்ளவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றித் தில்லி கல்வியமைச்சர் கூறியபோது, 'தலைநகர் தில்லியில் காற்று மாசு அளவு தொடர்ந்து அதிகரித்து வருவதால் தொடக்கப் பள்ளிகளை மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் வகுப்புகளை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது' என்று அறிவித்துள்ளார்.

முன்னதாக தில்லியில் காற்று மாசு மோசமான அளவை எட்டியதையடுத்து, அனைத்து அரசு, தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு நவம்பர் 3-ஆம் நாள் விடுமுறை விடப்படுவதாக முதல்வர் அரவிந்த் கேஜரிவால் அறிவித்தார். இந்த நிலையில் காற்று மாசு மேலும் கடுமையான அளவில் மோசமாகி 'சிவியர் பிளஸ்' என்ற நிலையை தற்போது எட்டியுள்ளது.

காற்றின் தரக்குறியீடு நவம்பர் 4 அன்று மாலை 415 ஆக இருந்தது; அது மறுநாள் காலை 7 மணிக்கு 460 ஆக மோசம் அடைந்தது. தில்லியின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள காற்றின் தரக் துகள் பிஎம் 2.5 என்ற அளவில் காணப்படுகிறது. இந்த அளவுக்கு மாசடைந்த காற்றை தொடர்ச்சியாக சுவாசித்தால் அது சுவாச மண்டலத்தில் ஆழமாக ஊடுருவி பல்வேறு உடல்நலக் கோளாறுகளை ஏற்படுத்தும்.

உலக சுகாதார அமைப்பும், அரசும் பரிந்துரைத்துள்ள வரம்பை விட தில்லியின் பல்வேறு பகுதிகளில் காற்றின் மாசு அளவு பல மடங்கு மோசமான நிலையை எட்டியுள்ளது. பஞ்சாப், ஹரியாணா மாநிலங்களில் நெல் அறுவடை முடிந்தபின் அதன் கழிவுகளை எரிப்பது அதிகரித்து வருகிறது. இந்தச் சூழலில் காற்று வீசுவதால் ஏற்பட்டுள்ள மாறுபாடு, வெப்பநிலை ஆகியவையும் தில்லியில் காற்றின் தரத்தைக் கடுமையாக பாதித்து வருகின்றன.

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத் தரவுகளின்படி அக்டோபர் 27 முதல் நவம்பர் 3 வரை தில்லியின் காற்றின் தரக் குறியீடு 200 புள்ளிகளுக்கு மேல் அதிகரித்துள்ளது. அதன்படி நவம்பர் 3 அன்று காற்றின் தரக் குறியீட்டு அளவு 450-க்கு மேல் அதிகரித்து மிக மோசமான அளவான 'சிவியர் பிளஸ்' என்ற நிலையை எட்டியுள்ளது.

கடந்த 2021 நவம்பர் 12 அன்று, தில்லியில் காற்றின் தரக் குறியீடு 471 ஆக அதிகரித்ததுதான் இதுவரை மிகவும் மோசமான அளவாகக் கருதப்படுகிறது.

அதன்பின், கடந்த நவம்பர் 3 அன்றுதான் இந்தக் குறியீடு 24 மணி நேர சராசரி அளவாக 468-ஐ தொட்டது. தில்லியின் அண்மைப் பகுதிகளான காஜியாபாத் (410), குருகிராம் (441), நொய்டா (436), கிரேட்டர் நொய்டா (456), ஃபரீதாபாத் (461), தில்லி பல்கலைக்கழகம் (456), லோதி சாலை (385) ஆகிய பகுதிகளிலும் காற்றின் தரம் அபாயகரமான நிலையில்தான் உள்ளது.



உதயை மு. வீரையன்

மருத்துவர்கள் கூற்றுப்படி, ஆரோக்கியமான உடல் நலனுக்கான காற்றின் தரக் குறியீடு 50-க்கும் குறைவாகவே இருக்க வேண்டும். ஆனால் தில்லியில் கடந்த சில நாள்களாக அது அபாயகரமான அளவை எட்டியுள்ளது.

அங்கு இப்போது காற்றின் தரக்குறியீடு 400-ஐ எட்டியுள்ளதால் அங்கு வசிக்கும் மக்கள் பெரும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர்.

குறிப்பாக நுரையீரல் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இந்த அளவிலான காற்றின் தரம் மிக ஆபத்தானது. நுரையீரல் புற்றுநோய் அபாயத்தைக் கூட இது ஏற்படுத்தும் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

**ஆறுகள் தொழிற்சாலை கழிவுகளால் மாசடைந்துவிட்டன. விவசாய சங்கத்தினரும், சமூக ஆர்வலர்களும் போராடிப் போராடி அலுத்து விட்டனர். நீதிமன்றங்களும் எச்சரிக்கை செய்தன. அப்படியிருந்தும் அரசும், அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.**

தில்லியிலும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் காற்றின் தரத்தை மீட்டெடுக்கும் முயற்சியாக மத்திய அரசு பல்வேறு கடுமையான விதிமுறைகளை அமல்படுத்தியுள்ளது. அதன்படி, அத்தியாவசிய சேவைகளை வழங்கும் லாரிகள், இலகுரக வாகனங்கள் தவிர பிற வாகனங்கள் தில்லிக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைகள், சாலைகள், மேம்பாலங்கள், மின் பகிர்மானம் போன்ற கட்டுமானங்களும், இடிப்பு நடவடிக்கைகளும் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த ஐக்யூ அமைப்பு, மிக மோசமான அளவில் காற்று மாசு நிலவும் நகரங்களைப் பட்டியலிட்டுள்ளது. தில்லி நகரம், இப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது. இந்தியாவின் கொல்கத்தா, மும்பை மட்டுமின்றி, லாகூர், கராச்சி (பாகிஸ்தான்), டாகா (வங்கதேசம்) ஆகிய நகரங்களும் இப்பட்டியலில் உள்ளன.

உலகை அச்சுறுத்தும் பத்து அச்சுறுத்தல்களில் முக்கியமானது சூழல் சீர்கேடு என்று ஐ.நா. சபை கூறியுள்ளது.

இயற்கையின் கொடையான ஆறுகள் எல்லாம் தொழிற்சாலை கழிவுகளால் மாசடைந்துவிட்டன. விவசாய சங்கத்தினரும், சமூக ஆர்வலர்களும் போராடிப் போராடி அலுத்து விட்டனர். வழக்குகள் தொடரப்பட்டன. நீதிமன்றங்களும் எச்சரிக்கை செய்தன. அரசும், அதிகாரிகளும் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை.

நிலவுக்குப் போவதற்கு கோடி கோடியாகச் செலவழிக்கும் நாடுகள், நம்மைத் தாங்கிக் கொண்டிருக்கும் பூமியைப் பாதுகாக்க வேண்டாமா? காலநிலை மாற்றத்தின் ஒரு அம்சமே மாசுக் கட்டுப்பாடு ஆகும். காலநிலை மாற்றம், பருவநிலை மாற்றம் என்னும் புதுப்புது அபாயங்களைப் பற்றியெல்லாம் உலக நாடுகள் கூடி அடிக்கடி பேசி தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில்தான் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை.

உலக நாடுகளுக்கு எல்லாம் இப்போது கவலைக்குரிய பிரச்னையாக இருப்பது காலநிலை மாற்றம். மானுடத்தின் மிக முக்கிய பிரச்னையாக காலநிலை மாற்றம் உருவாகி இருக்கிறது. அதிகமான வெயில், அதிகமான மழை, காலம் தவறி பெய்யும் மழை, பெய்யாமல் கெடுக்கும் மழை, அதிகப்படியான வெப்பம், வெள்ளம், நிலநடுக்கம், நிலச்சரிவு, சுனாமி, புதிய புதிய நோய்கள், உடல் நலமும், மனநலமும் பாதிக்கப்படுவது, காற்று மாசுபடுதல் அனைத்தும் இப்போது அதிகமாக ஏற்படுவதைக் கவனித்து வருகிறோம்.

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை தமிழகம் எதிர்கொள்ளும் வகையில், தமிழக முதல்வர் 'தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தை' தொடங்கி வைத்துள்ளார். இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் பொருட்டு பல்வேறு தொலைநோக்குப் பார்வையுள்ள முயற்சிகளை இது மேற்கொள்ளும்.

இந்த நெடும் பயணத்தில் 'தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்', 'பசுமைத் தமிழ்நாடு இயக்கம்' மற்றும் 'தமிழ்நாடு சதுப்பு நில இயக்கம்' ஆகிய மூன்று முக்கிய இயக்கங்களை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. ஒரு துறையின் பெயரே 'சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை' என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்துறை, காலநிலை மாற்றத்தினால் சமூகத்தின் கட்டமைப்பில் ஏற்படப் போகும் பல்வேறு பாதிப்புகளைப் புரிந்து கொண்டு, கடல் நீர்மட்ட உயர்வு, விவசாய உற்பத்தி பாதிப்பு முதலிய காலநிலை பிரச்னைகளையும், இதனால் மக்களுக்கு ஏற்படப்போகும் இழப்புகளையும் முன்கூட்டியே கண்டறிந்து அவற்றைக் குறைப்பதற்கான வழிகாட்டுதலை வழங்கும்.

கடந்த 2021-ஆம் ஆண்டு கிளாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, 'இந்தியா வரும் 2070-ஆம் ஆண்டிற்குள் கார்பன் சமநிலையை எட்டிவிடும்' என்று அறிவித்தார். இதன்மூலம் இது எவ்வளவு தீவிரமான பிரச்னை என்பதை உணர முடிகிறது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ்ச்சமூகம் இந்த பிரச்னைகளை அறிந்து ஆய்ந்து வைத்துள்ளது. 'நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்று தொல்காப்பியம் இலக்கணம் வகுத்துள்ளது. 'நீரின்றி அமையாது உலகு' என்று வள்ளுவம் வரையறை செய்துள்ளது.

பழந்தமிழர்கள் அறிந்திருந்த சுற்றுச்சூழல் பற்றிய பார்வை குறித்து இயற்கைதான் நமக்கு நாள்தோறும் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறது. மலைகளும், மரங்களும், ஆறுகளும், கடல்களும், பறவைகளும், விலங்குகளும் நமக்கான வாழ்க்கைப் பாடங்களை கற்றுக் கொடுப்பதை இதுவரை கவனிக்கவே இல்லை. அறிவியலும், நாகரிகமும் வளர வளர நம் கவனம் எங்கோ போய்விட்டது. அதனைத் திருப்ப வேண்டாமா?

நாம் வாழும் பூமி தோன்றி 450 கோடி ஆண்டுகள் ஆகி விட்டன என்று கூறுகின்றனர். அந்த பூமியில் உயிர்கள் உருவாகி செழித்து வளர்ந்தன என்பதையே வரலாறுகள் கூறுகின்றன. அந்த உயிர்களை, தொடர்ந்து காத்து வர வேண்டிய கடமை மனித சமுதாயத்துக்கு உள்ளது. ஆனால், அந்தக் கடமையை அரசுகளும், மனித சமுதாயமும் செய்யத் தவறி விட்டன.

உலகின் மிக அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக வளர்ந்துவிட்ட இந்தியா, அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டிய கடப்பாடு கொண்டது. தலைநகரம் தில்லியிலேயே மக்கள் வாழ முடியாமல் காற்றின் மாசு துரத்துகிறது. இது மத்திய-மாநில அரசுகளுக்கு ஒரு சவாலாகவே உள்ளது.

அரசு ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும் விடுமுறை அறிவித்து விடுவதால் காற்று மாசு பிரச்னை முடிவுக்கு வந்துவிடாது. அதற்கு அரசுகள் செய்ய வேண்டியது என்ன? இந்த வினாவுக்கு விடை காண வேண்டிய தருணம் இது.

கட்டுரையாளர்:
எழுத்தாளர்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தன்னம்பிக்கைதான் தீர்வு!

சமூக ஆர்வலர்களை கவலைக்குள்ளாக்குகிறது அதிகரித்துவரும் தற்கொலைகள். வேலைவாய்ப்பின்மை, விவசாயக் கடன், மாணவர்கள் மத்தியில் காணப்படும் மன உறுதியின்மை உள்ளிட்ட பல காரணங்களால் தற்கொலைகள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. தற்கொலை செய்துகொள்பவர்களில் பெண்கள், அதிலும் குறிப்பாக இளம் பெண்கள் அதிகமாகக் காணப்படுவது அதிர்ச்சி அளிக்கிறது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் எந்த அளவுக்கு நிலைமை மோசமாகி இருக்கிறது என்பதை வெளிச்சம் போடுகின்றன. 2018 முதல் 2021 வரையிலான மூன்று ஆண்டுகளில் இந்தியாவிலேயே அதிகமாக தற்கொலைகள் காணப்பட்ட இரண்டாவது மாநிலமாக தமிழகம் இருக்கிறது.

22,207 தற்கொலைகளுடன் மகாராஷ்டிரமும், 18,925 தற்கொலைகளுடன் அடுத்த இடத்தில் தமிழகமும் 2021-இல் காணப்பட்டது. மகாராஷ்டிர மாநிலத்தில் விவசாயிகளின் தற்கொலை அதிகம் என்றால், தமிழகத்தில் மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் ஆகியோரின் தற்கொலை எண்ணிக்கை அதிகம் என்பதைப் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

திருமண உறவுச் சிக்கல்களும், தனிப்பட்ட பிரச்னைகளும் பெரும்பாலான தற்கொலைகளுக்கான காரணங்கள். பருவக் கோளாறுகளும், மனநிலை பாதிப்புகளும் பரவலாக தற்கொலைக்கு பலரைத் தூண்டுகின்றன. பெண்கள் தற்கொலைக்கு மாதவிடாய் பிரச்னைகள் முக்கிய காரணமாக கூறப்படுகிறது. சென்னையைப் பொறுத்தவரை ஆண்களைவிட இளவயதுப் பெண்களின் தற்கொலைகள் கூடுதலாகக் காணப்படுவதை சுட்டிக்காட்டத் தோன்றுகிறது.

ஆண்டுதோறும் தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைப் பார்க்க முடிகிறது. பெரும்பாலான தற்கொலைகள் தனிப்பட்ட பிரச்னைகள் காரணமாக நிகழ்கின்றன என்றாலும், எந்தவொரு தற்கொலைக்கும் தனிப்பட்ட பிரச்னையே காரணம் என்று கூறிவிட முடியாது. எந்தவொரு தனி மனிதனும் தீவு அல்ல என்பதும், தனிப்பட்ட பிரச்னைக்கு சமூகக் கோணமும் உண்டு என்பதும் மறந்துவிடக் கூடியவை அல்ல.

ஒட்டுமொத்த சமுதாயமும் ஏதாவது ஒருவகை அழுத்தத்தால் பாதிக்கப்படும்போது, தற்கொலை இயல்பை அதிகரிக்கும் என்பது ஆய்வுகள் வெளிப்படுத்தும் செய்தி. சமூக, அரசியல், பொருளாதார பிரச்னைகள் தனிப்பட்ட வாழ்க்கையை பாதிப்பதும், பலவீனமான மனங்கள் அதனால் பாதிக்கப்பட்டு தற்கொலை சிந்தனைக்கு தூண்டப்படுவதும் நிரூபிக்கப்பட்ட உண்மைகள்.

வேலை இல்லாதவர்களும், சுய தொழிலில் ஈடுபட்டவர்களும் பெரும்பாலான தற்கொலைகளுக்குக் காரணமாவர். மொத்த தற்கொலைகளில் வேலை இல்லாதவர்களின் பங்கு சுமார் 10%. 2018-இன் ஆய்வு ஒன்றின்படி, ஒவ்வொரு 45 நிமிடத்திலும் வேலையற்ற ஒருவர் தற்கொலை செய்துகொள்கிறார். தற்கொலை செய்து கொள்வதில் பெரும்பாலோர் சமுதாயத்தின் அடித்தட்டு வர்க்கத்தினர்.

உலக சுகாதார நிறுவனத்தின் கணக்குப்படி, உலகளாவிய நிலையில் ஆண்டுதோறும் சுமார் எட்டு லட்சம் தற்கொலைகள் நிகழ்கின்றன. 2021 தேசிய குற்ற ஆவணக் காப்பகப் புள்ளிவிவரப்படி இந்தியாவில் 1.64 லட்சம் தற்கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. அதாவது, உலகளாவிய அளவில் சுமார் 20% தற்கொலைகள் இந்தியாவில் காணப்படுகின்றன. எல்லா தற்கொலைகளும் பதிவு செய்யப்படுவதில்லை என்பதால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கக்கூடும்.

ஒவ்வொரு தற்கொலைக்குப் பின்னாலும் இளைஞர்களாக இருந்தால் 25 முயற்சிகளும், வயது முதிர்ந்தவர்களாக இருந்தால் நான்கு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தற்கொலை என்பது அனைத்து வயதினருக்கும் பொதுவானதாகவே காணப்படுகிறது.

பணக்கார – ஏழை, அதிக வருவாய் – குறைந்த வருவாய், பெரிய – சிறிய என்கிற வேறுபாடு இல்லாமல் அனைத்து நாடுகளிலும் தற்கொலைகள் காணப்படுவதிலிருந்து இதற்கு எந்தவொரு குறிப்பிட்ட காரணத்தையும் சொல்லிவிட முடியாது. குடும்பத் தகராறுகள், உடல்நிலை பாதிப்புகள், மது, போதை மருந்து பிரச்னை, மணவாழ்வு குழப்பம், காதல் தோல்வி போன்றவை பொதுவான காரணங்களாக தெரிகிறது.

இந்தியாவில் மனோதத்துவ நிபுணர்களும் (சைக்காலஜிஸ்ட்), மனநோய் மருத்துவர்களும் (சைக்யாடிரிஸ்ட்) குறைவாகக் காணப்படுவதை பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஒரு லட்சம் பேருக்கு மூன்றுக்கும் அதிகமான மனநோய் மருத்துவர்கள் இருப்பதற்கு பதிலாக இந்தியாவில் 0.75 மனநோய் மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். அதிக வருவாய் உள்ள, வளர்ச்சி அடைந்த நாடுகளில் மனநோய் மருத்துவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம் பேருக்கு 6 என்கிற விகிதத்தில் காணப்படுவதை குறிப்பிடத் தோன்றுகிறது.

மனநோய் பிரச்னைகள் தனிப்பட்ட நபர்களை மட்டுமல்லாமல், பொருளாதாரத்தையும் பாதிக்கும். உலக சுகாதார நிறுவன புள்ளிவிவரப்படி, ஆண்டுதோறும் சுமார் ஒரு டிரில்லியன் டாலர் மதிப்புள்ள உற்பத்தி, மனநிலைத் தளர்வுகளால் பாதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மட்டுமே எடுத்துக்கொண்டாலும், 2021-ஆம் ஆண்டு தற்கொலைகளால் ரூ.30,000 கோடி, அதாவது மாநில ஜிடிபி-யில் 1.3% இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்த பிரச்னைக்கு முடிவுதான் என்ன? மத்திய – மாநில பட்ஜெட்டுகளில் மனநோய் பிரச்னைகளை எதிர்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படுவதும், தேசிய 'டி-மனஸ்' போன்ற திட்டங்களும் மட்டுமே தீர்வாகாது. இதை சமுதாய பிரச்னையாக மாற்றி, விழிப்புணர்வை அதிகரிப்பதும், தன்னம்பிக்கையை மேம்படுத்துவதும் ஓரளவுக்கு தீர்வாக அமையக்கூடும்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# வரலாறு படைத்த விராட் கோலி; இறுதி ஆட்டத்தில் இந்தியா



விராட் கோலி 117





## சுருக்கமான ஸ்கோர்

இந்தியா 397/4 (50 ஓவர்கள்)

| | |
|---|---|
| விராட் கோலி | 117 |
| ஷ்ரேயஸ் ஐயர் | 105 |
| ஷுப்மன் கில் | 80* |
| **பந்துவீச்சு** | |
| டிம் சௌதி | 3/100 |
| டிரென்ட் போல்ட் | 1/86 |
| கிளென் பிலிப்ஸ் | 0/33 |

நியூசிலாந்து 327/10 (48.5 ஓவர்கள்)

| | |
|---|---|
| டேரில் மிட்செல் | 134 |
| கேன் வில்லியம்சன் | 69 |
| கிளென் பிலிப்ஸ் | 41 |
| **பந்துவீச்சு** | |
| முகமது ஷமி | 7/57 |
| குல்தீப் யாதவ் | 1/56 |
| ஜஸ்பிரீத் பும்ரா | 1/64 |

## கோலி '50'

### ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக சதம் (டாப் 5)

| வீரர் | எண்ணிக்கை | இன்னிங்ஸ்கள் |
|---|---|---|
| விராட் கோலி | 50 | 279 |
| சச்சின் டெண்டுல்கர் | 49 | 452 |
| ரோஹித் சர்மா | 31 | 253 |
| ரிக்கி பாண்டிங் | 30 | 365 |
| சனத் ஜெயசூரியா | 28 | 433 |

397/4

711

7/57

3

28

23

4

## சாதனைத் தருணம்...

## இதைவிட மகிழ்ச்சி இல்லை



– சச்சின் டெண்டுல்கர் (இந்திய கிரிக்கெட் நட்சத்திரம்)